BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது கறுப்பின மற்றும் பூர்வகுடி இளைஞர்களுக்கு நிகழ்த்துகலை பயிற்சி வகுப்பு மற்றும் கூட்டுறவுத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (மே 31, 2021) – ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, கனடா நாட்டிலேயே அதன் வகையில் முதலாவதான புதிய திட்டமாகிய, கறுப்பின மற்றும் பூர்வகுடி இளைஞர்களுக்கு நிகழ்த்துகலை பயிற்சி வகுப்பு மற்றும் கூட்டுறவுத் திட்டத்தை, ஜூன் 5 ஆம் தேதி சனிக்கிழமையன்று ஆரம்பித்து வைக்கிறது.

கறுப்பின மற்றும் பூர்வகுடி மாணவர்களுக்காக, அவர்களாலேயே வடிவமைக்கப்பட்ட இந்த திட்டமானது, கறுப்பின மற்றும் பூர்வகுடி இளைஞர்களைக் கொண்டாடுவதற்கும் அவர்களை உயர்த்துவதற்கும், கலாச்சார புரிதலை அதிகரிப்பதற்கும், தொழில்தகைமையான மேம்பாட்டு வாய்ப்புகளை வழங்குவதற்கும், நேரடி நிகழ்த்து கலைத்துறையில் எதிர்கால தலைமைப் பதவிகள் மற்றும் வேலைவாய்ப்புகளுக்கு மாணவர்களை தயார்படுத்துவதற்கும் என உருவாக்கப்பட்டது.

சமத்துவம் மற்றும் சமூக தாக்கத்தின் மீதான செயல்பாட்டிற்கான தேவையை உணர்ந்த இந்த திட்ட நிகழ்ச்சியானது, கலைத்துறைகளில் பயிற்சியையும் வாய்ப்புகளையும் பெறுவதில் கறுப்பின மற்றும் பூர்வகுடி இளைஞர்கள் எதிர்கொள்ளும் தடைகளை உடைக்க உதவும். இந்த திட்டத்திற்கு அல்கோமா பல்கலைக்கழகம் ஆதரவளிக்கிறது மற்றும் உள்ளூர் பள்ளி நிர்வாக வாரியங்களுடன் ஒருங்கிணைந்து ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்தினரால் நிர்வகிக்கப்படுகிறது.

கடந்த மூன்று மாதங்களில், ஐந்து மாணவர்களின் முதல் தொகுப்பானது முன்னணி நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்தது; இது முன்னணி ஆலோசகர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களான கேமரூன் கிராண்ட், ஏஞ்ஜலா போயர், டேனியல் ஆர். வால்ட்டர்ஸ் மற்றும் நகரத்தின் நிகழ்த்துகலை ஊழியர்களுடன் இணைந்து தொடங்கப்பட்டது. இந்த மெய்நிகர் முன்னணி திட்டத்தில் எதிர்வரும் பல ஆண்டுகளுக்கான திட்டத்திற்காக ஒரு கட்டுக்கோப்பினை வடிவமைக்கவே இந்தக் குழு வேலை செய்தது.

ஜூன் 5 ஆம் தேதி, சனிக்கிழமை, பிற்பகல் 1 மணிக்கு, 2021 ஆம் ஆண்டிற்கான முன்னணி திட்டம் பற்றியும், நிகழ்ச்சிநிரல் வடிவமைப்பாளர்களாக இருக்கின்ற மாணவர்களின் பங்கு மற்றும் இதில் எவ்வாறு ஈடுபடுவது என்பது பற்றியும் மேலும் அறிய, ஒரு மெய்நிகர் செய்முறை விளக்கக்காட்சியில் கலந்து கொள்ள, therosebrampton.ca க்கு வருகை தரவும்.

2022 ஆம் ஆண்டில், பணம் செலுத்தி பங்கேற்கவுள்ள இன்டர்ன்ஷிப் சேர்க்கையானது, பல்கலைக்கழக மற்றும் கல்லூரி விண்ணப்பதாரர்களுக்குத் துவக்கப்படும்; மேலும் இதில் இடம் பெறுவது என்பது உயர்நிலைப் பள்ளி விண்ணப்பதாரர்களுக்குத் திறந்தநிலை கூட்டுறவு முறையிலான சேர்க்கை எனும் திட்டத்தின் மூலம் சாத்தியமாகும். நகரத்தின் சமுதாயத்தில் இருக்கின்ற பரந்துவிரிந்து இருக்கும் தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய தன்மை கொண்ட பணிப்படையை ஈர்ப்பதிலும் மற்றும் வளர்ப்பதிலும் கவனம் செலுத்தும் வகையிலான வியூகத்துடன் ஒருமித்துப்போகும் வகையில், ப்ராம்ப்ட்டனின் இன்டர்ன்ஷிப் கூட்டுறவு திட்டமானது கட்டமைக்கப்பட்டுள்ளது.

**ப்ராம்ப்ட்டன் நகரின் பலகலவையான தன்மையைக் கொண்டாடுதல்**

14 முதல் 29 வயதிற்குட்பட்ட 130,600 க்கும் மேற்பட்ட இளைஞர்களைக் கொண்டிருக்கின்ற ப்ராம்ப்ட்டன் நகரமானது, கனடாவின் இளைய நகரங்களில் ஒன்றாகும். இந்த ஆண்டு, ப்ராம்ப்ட்டன் நகரமானது இளைஞர்கள் பணியாற்றுவதற்கான ஆர் பி சியின் மிகச்சிறந்த நகரங்கள் (RBC's Best Cities for Youth to Work), எனும்27 நகரங்களைக் கொண்ட பட்டியலில் 18 ஆவதாக இருந்தபடி நகரின் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்ல உதவுகிறது.

மார்ச் 2020 இல், ப்ராம்ப்ட்டன் நகரம் பிளே ஒர்க்ஸ் (Play Works) லிருந்து இளைஞர்களுக்கு ஏற்றபடியான பிளாட்டினம் சமுதாயம் (Platinum Youth Friendly Community) எனும் சமூக பதவியைப் பெற்றது; இது பார்க்ஸ் மற்றும் ரிக்ரியேஷன் ஒன்ட்டேரியோவினால் (Parks and Recreation Ontario) ஆதரவளிக்கப்படுகிறது. இளைஞர்களுக்கான வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு வாய்ப்புகளுக்கான சிறந்த அர்ப்பணிப்புக்காக ப்ராம்ப்ட்டன் நகரம் மற்றும் அதன் சமூக பங்காளிகள் அங்கீகரிக்கப்படுவது இது மூன்றாவது முறையாகும்.

பணியிடத்திலும் சமூகத்திலும் உள்ள தடைகளை கண்டறிந்து அகற்றுவதற்காக, ப்ராம்ப்ட்டன் நகர சபையானது, 2020 டிசம்பரில் சமத்துவ அலுவலகம்(Equity Office) ஒன்றை நிறுவியது; இது அனைத்து தனிநபர்களையும் நியாயமாகவும் சமத்துவமாகவும் நடத்தப்படுவதை உறுதி செய்வதற்கும் குடியிருப்பாளர்களிடையே இணக்கமான சூழலை மேம்படுத்துவதற்கும் உதவியது. ஜூன் 2020 இல், ப்ராம்ப்ட்ட்டன் நகரமானது தனது முதலாவது கறுப்பு ஆப்பிரிக்க மற்றும் கரீபியர் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்பு (Black African and Caribbean Social, Cultural and Economic Empowerment and Anti-Black Racism Unit) ஒன்றை அறிமுகப்படுத்தியது; இது கறுப்பர் மீதான இனவெறிக்கு எதிராக, அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கவும், தனிநபர்கள் வெற்றிகரமாகவும், உற்பத்தி ரீதியாகவும் இருப்பதை மேம்படுத்துவதற்கெனவும் ஏற்படுத்தப்பட்ட்து.

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டன் நகரமானது முதலாவது கறுப்பின மற்றும் பூர்வகுடி இளைஞர்களுக்கான நிகழ்த்து கலை பயிற்சி வகுப்பு மற்றும் கூட்டுறவுத் திட்டத்தை ஆதரிப்பதில் பெருமிதம் கொள்கிறது. இந்த திட்டம்

கறுப்பின மற்றும் பூர்வகுடி இளைஞர்களை கொண்டாடி உயர்த்தும், கலாச்சார புரிதலை அதிகரிக்கும், தொழில்தகைமையான மேம்பாட்டுக்கான வாய்ப்புகளை வழங்கும், மேலும் நிகழ்த்துகலை துறையில் எதிர்கால தலைமைப்பண்புக்கான தன்மைகள் பெறவும் மற்றும் வேலைவாய்ப்புகளைப் பெறவும் மாணவர்களை தயார்படுத்தும். ”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் நகரமானது, இளைஞர்களின் குரல்களுக்கு செவிசாய்ப்பதிலும் அவர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதிலும் உறுதியாக உள்ளது மற்றும் செயல்பாடுகளை மேற்கொள்வதில் நமது இளைஞர்களின் முக்கியத்துவத்தையும் அவர்களுக்காக முதலீடு செய்வதிலும் உள்ள மதிப்பையும் அங்கீகரிக்கிறது. வேலை சார்ந்த பயிற்சி மற்றும் கூட்டுறவு திட்டங்கள் இளைஞர்களுக்கு பெருமளவில் பயனளிக்கின்றன, என்பதுடன், இந்த நிகழ்ச்சியை கறுப்பின மற்றும் பூர்வகுடி இளைஞர்களுக்கு நிகழ்த்துகலைகள் வகையில், இந்த திட்டத்தை வழங்கிய கனடாவின் முதல் நகரம் ப்ராம்ப்ட்டன் என்பதில் நான் பெருமைப்படுகிறேன்.”

- *ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர்; வார்டுகள் 1 & 5 , தலைவர், சமுதாய சேவைகள் துறை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“கறுப்பின மற்றும் பூர்வகுடி இளைஞர்கள் மீது ஒரு குறிப்பிட்ட கவனம் செலுத்துவதன் மூலம், ப்ராம்ப்ட்டன் நகரம் சமத்துவம் மற்றும் சமூக தாக்கத்தின்பாலான செயல்பாடுகளின் முக்கியத்துவத்தை ஒப்புக்கொள்கிறது; மேலும் கலைகளில் பயிற்சி மற்றும் வாய்ப்புகளைப் பெறுவதில் கறுப்பின மற்றும் பூர்வகுடி இளைஞர்கள் எதிர்கொள்ளும் தடைகளை உடைக்கிறது.

- *டேவிட் பேர்ரிக், தலைமை செயல் அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ பொருளாதார அதிகாரமளித்தல் மற்றும் கறுப்பின மற்றும் பூர்வகுடி இளைஞர்கள் சாதிப்பதற்கான வாய்ப்புகளை இனம் கண்டு வளர்த்தல் ஆகியவையே, கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்பின் குறிக்கோள்களில் ஒன்றாகும். இளைஞர்களை முன்னணி வகிக்க ஊக்குவிப்பது மிகவும் முக்கியமானது, இது தனிநபரின் மற்றும் தொழில்முறை வளர்ச்சிக்கான வாய்ப்புகளை ஊக்குவிப்பதால் இது அருமையான திட்டமாகும். நேரடி நிகழ்த்துகலைத்துறையில் ஒரு அடையாளத்தை உருவாக்குவதற்கான அவர்களின் சாத்தியக்கூறுகள் குறித்து நான் பரவசமடைகிறேன், இதை சாத்தியமாக்க உதவிய அல்கோமா பல்கலைக்கழகத்திற்கு நன்றி! ”

- *கின்னெத் ச்சாப்மன்; முதுநிலை ஆலோசகர், கறுப்பின ஆப்பிரிக்கர் மற்றும் கரீபிய சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார அதிகார அமைப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்பு; ப்ராம்ப்ட்டன் நகரம்*

“எங்கள் நிகழ்த்துகலை அணிக்கு கூட்டுறவு மாணவர்கள் மற்றும் வேலை சார்ந்த பயிற்சி பெறுபவர்களை வரவேற்பது என்பது, எங்கள் சமூகத்தில் உள்ள கறுப்பின மற்றும் பூர்வகுடி இளைஞர்களை மேலும் ஆதரிப்பதற்கான மகத்தான ஒரு வாய்ப்பாகும். இந்த திட்டத்தில் பங்கேற்கும் மாணவர்கள், நிகழ்த்துகலை துறையில் இருக்கும் வேலை வாய்ப்புக்களை தேடிக்கண்டறிவார்கள், மற்றும் தங்களுக்கான கற்றல் குறிக்கோள்களை நோக்கி சொந்தமாக செயல்படுவார்கள்; மற்றும் ப்ராம்ப்ட்டனில் இளைஞர்களைக்

கொண்டாடி மற்றும் மேம்படுத்தும் வகையில், புதுமையான முயற்சிகளை அவர்களே உருவாக்குவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்! ”

- *ஸ்டீவன் ஸ்சிப்பர், செயல்பாட்டு கலைசார்ந்த இயக்குனர், நிகழ்த்துகலைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ஒரு முக்கியமான ஆரம்ப முயற்சியின் ஒரு பகுதியாக இருக்கும் வாய்ப்பு வந்தபோது, நாங்கள் அதைப் பற்றி பிடித்துக்கொண்டோம். ப்ராம்ப்ட்டன் நகர நிகழ்த்து கலை கூட்டுறவு மற்றும் பணிசார்ந்த பயிற்சி திட்டமானது, மாணவர்களுக்கு நுணுக்கம் நிறைந்த மென்மையான மற்றும் கடினமான திறன்களை வளர்ப்பதற்கான அருமையான வாய்ப்பை வழங்கும்; இது எதிர்வரும் ஆண்டுகளில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கான தொழில்களைத் தயார் நிலையில் இருக்க வைக்கும். எங்கள் சமூகங்களுக்குள் அனைவரையும் உள் சேர்த்தல், பரந்து விரிந்த தன்மை கொண்டபடி, பல கலாச்சாரங்களின் ஊடாக கற்கவும் அனுபவம் பெறவும் எடுக்கப்படும் முயற்சியின் ஒரு பகுதியாக இருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த திட்டத்தை ஆதரிக்க முடிந்ததில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம், பெருமைப்படுகிறோம், ப்ராம்ப்ட்டனில் இருப்பதற்கும், ப்ராம்ப்ட்டனின் வளர்ச்சியின் ஒரு பகுதியாக இருப்பதற்கும், இளைஞர்கள் கல்வி பயணத்தின் அனைத்து நிலைகளிலும் இளைஞர்களை ஆதரிப்பதிலும் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ”

- *க்ரெய்க் ஃபௌலர், துணைத்தலைவர், வளர்ச்சி, புதுமை படைத்தல் மற்றும் வெளியுறவுத் துறைகள், அல்கோமா பல்கலைக்கழகம்*

-30-

**.கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca